DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. S.Amalanatha Kamalakannan, B.A, B.L.,(Hon's)
District Munsif (FAC), Uthamapalayam.

**OS.No.30/2023**

**CNR.No: TNTH06-000069 -2023 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **செல்லப்பாண்டி** | Town | **மார்க்கையன்கோட்டை** |
| Father's Name | : **சுந்தராஜ்** | Taluk | : **உத்தமபாளையம்** |
| Age | : | **PW1** | |

---

நாள் : 17.04.2026

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பில் 1வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதைப்படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். 22.06.2011ம் தேதிய வாதியின் தகப்பனார் மற்றும் 3,4 பிரதிவாதிகள் சேர்ந்து பதிவு செய்த பாக பிரிவினை ஆவண எண். 2758/2011—ன் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 19.07.2012ம் தேதிய தாவா சொத்திற்கு வாதியின் பெயரில் உள்ள பட்டா எண். 2499 கணினி நகல் தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) 2019 முதல் 2022ம் ஆண்டிற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் தாவா சொத்திற்கு வாதி பெயரில் பசலி செலுத்தியதற்கான ரசீது (3 ரசீதுகள்) அசல் தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வாதியின் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான அடங்கல் அசல் தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 14.12.2022ம் தேதிய வாதி, பிரதிவாதிகள் மீது சின்னமனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் அசல் தாக்கல் செய்கிறேன் (**அது**

**வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.17 17:29:53 +0530

District Munisf (FAC),
Uthamapalayam.